கொடபொல பிரதேச சபை - 2022

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொடபொல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கொடபொல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிப் பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,533,758 தொகைக்காக பலவினக் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | ஓய்வூதிய பணிப்பாளரிடம் உரிய உறுதிப்படுத்தல் கிடைத்த பின்னர் ஏற்பாடுகள் ஒதுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 8,774,750 இற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் பெற வேண்டிய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையினால் வங்கியில் பேணப்பட்டு வந்திருந்த 04 நிலையான வைப்புக் கணக்குகளுக்கு உரிய பெற வேண்டிய ரூபா 495,478 இற்கான வட்டியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மூடப்பட்டிருந்த இரண்டு நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் ஆரம்பிக்கப்பட்டு முதிர்வடைந்த 03 நிலையான வைப்புக் | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகள் தொடர்பாக கிடைத்திருந்த வட்டி வருமானம் ரூபா 201,389 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 134 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 1,047,000 தொகைக்கான அறிவித்தல் பலவைக் கட்டணம் கணக்கீடு செய்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டால் ரூபா 750 இற்கான தண்டப்பணம் ஒன்று அறவிடப்படுவதால் கணக்கீடு செய்யப்படவில்லை என. | சரியாக கணக்கீடு செய்யப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 538,427 தொகையாக காணப்பட்ட பலவினச் செலவுகளுக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,689,168 தொகைக்கான முடிவுற்ற வேலைப் பெறுமதி காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | உறுதியான இனங்காணல் ஒன்று இன்றி ரூபா 3,000,000 தொகை நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக முன்கொண்டு வந்து காணப்படும் தொங்கல் கணக்கில் தொடர்ந்தும் முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 64,848 இற்கான வரவு மீதி மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

கூட்டுத்தொகை ரூபா 43,992,266 தொகைக்கான 14 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 103(i) | சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்றிற்கு 2022 ஒக்தோபர் 12 திகதி ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விபத்து தொடர்பாக நி.பி.103(I) நட்டங்கள் சேதங்கள் தொடர்பான அலுவல்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமான்தை விஞ்சிய செலவு ரூபா 5,833,966 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 4,599,518 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | | 2022 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 2,113,000 | 1,742,876 | 1,893,544 | 1,045,645 | 2,145,000 | 1,472,808 | 1,377,480 | 1,196,313 |
| ii. | வாடகை | 6,610,000 | 4,613,649 | 4,888,161 | 1,266,888 | 8,280,000 | 3,318,152 | 3,064,362 | 1,541,400 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,837,000 | 298,247 | 298,247 | - | 1,412,000 | 133,450 | 133,450 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 13,947,000 | 4,122,398 | 4,087,785 | 2,391,823 | 12,358,500 | 8,059,795 | 7,393,557 | 2,357,210 |
| | மொத்தம் | 25,507,000 | 10,777,170 | 11,167,737 | 4,704,356 | 24,195,500 | 12,984,205 | 11,968,849 | 5,094,923 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 இலக்க பெறுமதி மதிப்பீட்டு சட்டத்தின் 20 ஆவது பிரிவிற்கு இணங்க வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது, 2005 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதன பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி மீது 701 வீதவரி அலகுகளில் இருந்து வரி அறவிடப்பட்டு காணப்பட்டது. | 2023 ஆண்டின் போது 2020 பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், தற்போது புதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வீதவரி கட்டணம் திருத்தப்பட்டு அறவீடு செய்யப்படுகின்றது என. | சரியான பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி மீது வரி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 திசெம்பர் 09 திகதி வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்து மீளாய்வாண்டு இறுதியளவிலும் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டின் போது முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என கொடபொல வடக்கு மற்றும் கொடபொல தெற்கு கிராம சேவகர் பிரிவுகள் இனங்காண்பட்டு அவற்றுக்கான படம் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதற்காக 2023 இல் உதவி | சபையினால் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி விதிக்கப்பட்டு அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணையாளருக்கு அனுப்பட்டது எனவும் அதன்படி வீதவரி அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என | |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவில் பல வருட காலமாக முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 419,132 தொகைக்கான நிலுவை களியாட்ட வரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் அறிவுரை வேண்டப்பட்ட போதிலும் இது வரை அறிவுரை கிடைத்திருக்கவில்லை என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 15 கடையறைகளில் இருந்து ரூபா 252,172 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன், 10 கடையறைகள் தொடர்பாக ரூபா 6,000 விட மிகையான நிலுவை மீதிகள் காணப்பட்டது. | நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | தெனியாய பஸ் நிலையத்திற்கு முன்பக்கமான வர்த்தக தொடர் கட்டிடத்தின் 21 கடையறைகள் தொடர்பாக வாடகை பெறுமான மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன், கொடபொல தேசிய பாடசாலையின் முன்பக்கமாக காணப்படும் 03 கடையறைகள் தொடர்பாக கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது ஒரே முறையில் பெறும் பணம் ரூபா 950,000 தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் புதிய பெறுமதி மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என மற்றும் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | வருட இறுதியில் காணப்பட்ட ரூபா 1,266,888 இற்கான நிலுவை வாடகையில் 01 வருடத்தை மிகைத்துள்ள நிலுவை மீன் சந்தை வரி ரூபா 966,716 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் நிலுவையாக காணப்பட்ட காலவரையறை 03 வருடங்களுக்கு மிகையான நிலுவை மீதி ரூபா 687,651 தொகையாகும். | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக நீதிமன்றத்தில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள கொடபொல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் 09 ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், விடுதிகளில் இருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சபைச் சட்டத்தின் 149 ஆவது பிரிவிற்கு இணங்க கட்டணம் அறவிட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் 1% சதவீதத்தை மிகைத்தாத அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறவிடப்படாத வருமானங்களை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 உப பிரிவிற்கு இணங்க நகர்சார் அல்லாத அதிகார பிரதேசத்தில் காணப்படும் கட்டிடங்களின் வரைபடங்கள் அங்கீகரித்தல் காணிகளை துணைப் பகிர்வு மேற்கொள்ளல் தொடர்பான அலுவல்கள் மற்றும் கோட்போர் கூடத்தை வாடகைக்கு கொடுத்தல் ஆகியவை தொடர்பாக துணை விதிகள் சட்ட ஆக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | நகரசார் அல்லாத பிரதேசங்களுக்குரிய துணை விதிகளின் வரைவுகள் அங்கீகாரத்துக்காக மாத்தறை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | துணை விதிகள் விரைவாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான நகர்சார் அதிகாரப் பிரதேசத்தினுள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வர்த்தக மற்றும் வர்த்தகமல்லாத 03 கட்டிடங்கள் மற்றும் எல்லை மதில் 01 தொடர்பாக வரைவு மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ திட்டங்கள் உள்ளடங்கிய 2021 ஜூலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது முறைப்படுத்துவதற்கான இயலுமை காணப்படின் அந்த வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 1,084,790 இற்கான கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கோப்புக்கள் விரைவாக சமர்ப்பிக்கும் படி உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டது என. | உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் விளையாட்டுத் திடல்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாறை/ பல்லேகம வித்தியாலயத்தின் கரப்பந்தாட்ட விளையாட்டு திடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது பிழையான ரேட்களை பயன்படுத்தி ரூபா 232,543 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், தும்புத் துகள் படைக்காக விலைப்பகுப்பாய்வு ஒன்றின்றி ரூபா 114,642 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தென் மாகாண பொறியியலாளர் சேவை அலுவலகத்தின் விலை ரேட்கள் பயன்படுத்தப்பட்டது என. | உரிய ரேட்களை பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | மாகாண சபை உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் 2021 பிரதேச சபை உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெனியாய வாராந்த சந்தையின் மீதி வேலையை பூர்த்தி செய்வதற்கான நிர்மாண வேலைக்கு ரூபா 4,033,233 இற்கான முடிவுற்ற வேலை, நிர்மாண வேலை நிறைவேற்றப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதி இயற்கை காரணங்களினால் அழிவடைந்து காணப்பட்டதுடன், செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தேவையான தொடர் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது எனவும் 2023 ஆண்டு முடிவடைய முன்னர் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்திட்டத்தின் வேலைகள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றும் வேலை/ வெளிக்கள தொழிலாளர்கள் 12 பேர் சுகாதார தொழிலாளர் ஒருவர், நீர் உதவியாளர் ஒருவர் மற்றும் தகனசாலை இயக்குனர் ஆகிய பகுதிகளுக்குரிய குறிப்பிட்ட கடமைகள் சாட்டப்பட்டிருக்காததுடன், அதற்காக மீளாய்வாண்டு சம்பளம் மற்றும் படிகள் என சபை நிதியத்தில் இருந்து ரூபா 7,248,347 தொகை செலவிடப்பட்டிருந்தது. | தகைமைகள், சேவை தேவைப்பாடுகள், மருத்துவ காரணங்கள் போன்ற காரணிகளின் அடிப்படையில் கடமைகள் சாட்டப்பட்டிருந்தது. | பதவிக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |